HMOP No. 108/2021

Dated : 08.09.2023

Time: 03.20 p.m to 03.30 p.m

P.W- 1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1) மேற்படி எதிர்மனுதாரர் நான் மனுவில் சொல்லியது போன்று என்னை அடித்து துண்புறுத்தினார் என்பது மனுவிற்காக நான் சொல்லியுள்ள பொய்கள் என்றால் சரியல்ல. மேலும் எதிர்மனுதாரர் என்னை எப்போதும் திட்டியதில்லை என்றும் நான்தான் திட்டினேன் என்றும் சொன்னால் அது தவறு. நான் என் தகப்பனாருக்கு ரூ.50000/- பணம் கொடுத்தேன் என்றும் அது ஏன் எதற்கு கொடுத்தாய் என எதிர்மனுதாரர் கேட்டதால் அந்த பிரச்சணையை கருத்தில் கொண்டு இம்மனு தாக்கல் செய்தேன் என்றால் அது தவறு. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

2) திருமண காலத்தில் எதிர்மனுதாரர் எவ்வித பிரச்சணையையும் செய்யவில்லை என்றும் நான்தான் பிரச்சணை செய்து, சந்தேகப்பட்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் அது தவறு. மேலும் எதிர்மனுதாரர் என்னை ஒரு நல்ல மனைவியாக தான் பார்த்துக்கொண்டார் என்றால் அது தவறு. மேலும் என்னுடைய சகோதரரையும் எதிர்மனுதாரர் நல்ல முறையில் தான் பார்த்துக்கொண்டார் என்றும் அவர் எந்தஒரு தவறான கண்ணோட்டத்தில் என்னை அனுகவில்லை என்றால் அது தவறு. என் பெற்றோர்களையும் எதிர்மனுதாரர் நல்ல வகையில் தான் பராமரித்து வந்தார் என்றால் அது தவறு.

3) நான் தான் எதிர்மனுதாரரின் பெற்றோர்களை மதிக்காமல் இருநதேன் என்றால் தவறு. எதிர்மனுதாரர் எனக்கு கொடுத்த அறிவிப்பும், தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றும் நான் தான் அவருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் அவ்வாறு இல்லை. எங்களின் ஒரு குழந்தை என்னிடமும் மற்றொரு குழந்தை எதிர்மனுதாரரிடமும் இருப்பதால் அந்த குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில்

கொண்டு எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ ஆசைபடுகிறார் என்றால் தவறு, நான் அவருடன் வாழ விரும்பவில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து வாங்கி வீட்டிற்கு இன்றுவரை எதிர்மனுதாரர் மாத தவணை செலுத்திவருகிறார். கடந்த 3 வருடங்களாக நான் மாத தவணை செலுத்தவில்லை. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**